**ஆயுர்வேத வைத்திய சபை - 2022**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆயுர்வேத வைத்திய சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம், பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, ஆயுர்வேத வைத்திய சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில்,

நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது பேரவையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

**1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01** | | |
| (i) | நியமத்தின் 21(உ) பந்திக்கமைய மேலதிக நிதிக்கூற்றொன்றாக பாதிடப்பட்ட பெறுமதிகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகளிடையே ஒப்பீடொன்று அல்லது நிதிக்கூற்றுக்களில் | 2023 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும் என்பது மற்றும் நிதிக்கூற்றுக்கள் மிகவும் துல்லியமாக சமர்ப்பிக்கப்படும் என்பது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பாதிடப்பட்ட பெறுமதிகள் தனியானதொரு நிரலாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், உரிய ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | நியமத்தின் 28 ஆம் பந்தியின் பிரகாரம் குறிப்புகளில் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் அடிப்படையின் கீழ் இணக்கப்பாடு தொடர்பில் கூற்றொன்று தெளிவாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும் என்பது மற்றும் நிதிக்கூற்றுக்கள் மிகவும் துல்லியமாக சமர்ப்பிக்கப்படும் என்பது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | நியமத்தின் 132(அ) மற்றும் 133 பந்திகளுக்கமைய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பயன்படுத்திய அளவீட்டு அடிப்படை மற்றும் 132(இ) பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை புரிந்துக்கொள்ள தேவையான ஏனைய கணக்கீட்டு நியமங்கள் உள்ளடங்களாக பயன்படுத்திய கருத்திற்கொள்ளக்கூடிய கணக்கீட்டு நியமங்களின் பொழிப்பொன்ற 129(ஆ) பந்திக்கமைய குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும் என்பது மற்றும் நிதிக்கூற்றுக்கள் மிகவும் துல்லியமாக சமர்ப்பிக்கப்படும் என்பது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | நியமத்தின் 150 ஆம் பந்திக்கமைய வெளிப்படுத்த வேண்டிய நிறுவனத்தின் நிரந்தர அமைவிடம், சட்டத்தன்மை, செயற்பாடுகளின் தன்மை, பிரதான பணிகளின் விபரமொன்று மற்றும் செயற்பாடுகளை நிர்வகிப்பதற்குரிய நியதிச்சட்டங்களின் தொடர்புகள் போன்ற | 2023 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும் என்பது மற்றும் நிதிக்கூற்றுக்கள் மிகவும் துல்லியமாக சமர்ப்பிக்கப்படும் என்பது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| **(ஆ)** | **இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07** | | |
| | நியமத்தின் 50 ஆம் பந்திக்கமைய நிறுவனத்தின் செயற்பாடுகளின் ஒரே தன்மை மற்றும் ஒரே பயன்பாட்டுத் தன்மையுடைய சொத்துக்களின் தொகுதியாக, அதாவது வகுப்பொன்றாக இனங்காணப்படும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 6,979,238 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் மின்சாரம் மூலம் இயக்கப்படும் மற்றும் மின்சாரம் அல்லாத அலுவலக உபகரணங்கள் பிரிக்கப்பட்டு மிகவும் தெளிவாக வழங்கப்படுகின்றன. | சொத்து வகுப்புகள் பிரிக்கப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சேவை பெறுநர்களினால் சபையின் வங்கிக்க ணக்கிற்கு நேரடியாக வைப்புச் செய்யப்பட்ட ரூபா 23,300 வருமானமாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் கணக்குகளில் உள்ளடக்கப்படும் என்பது. | ஆண்டிற்குரிய அனைத்து வருமானங்களும் இனங்காணப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | புதிய தொலைபேசி இணைப்பொன்றினை பெற்றுக்கொள்ள செலவிடப்பட்ட ரூபா 17,015 தொகையை மூலதன செலவினமொன்றாக அல்லாது வருமானச் செலவினமாக கணக்கு வைத்தமையும், எதிர்வரும் | 2023 ஆம் ஆண்டின் கணக்குகளில் உள்ளடக்கப்படும் என்பது. | கண்காணிப்பு செயல்முறைகள் மற்றும் வகைப்பாடுகள் மூலம் ஆண்டு தொடர்பான செலவினங்களை சரியாகக் கண்டறிந்து கணக்கிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுக்குரிய ரூபா 11,100 ஆன அனுசரணை புகையிரத அனுமதிச்சீட்டு கட்டணமொன்று மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கு வைக்கப்பட்டமையினாலும், மீளாய்வாண்டின் வருமானச் செலவினம் ரூபா 28,115 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டுக்கான சபையின் 10 உத்தியோகத்தர்களுக்காக ஒதுக்கப்பட வேண்டிய பணிக்கொடை கொடுப்பனவு ரூபா 293,715 ஆன போதிலும், அது ரூபா 274,510 ஆன ரூபா 19,205 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2013 ஜனவரி 01 இல் பணியமர்த்தப்பட்ட ஒரு அதிகாரிக்கான பணிக்கொடை கணக்கீட்டில் இந்த தவறு ஏற்பட்டுள்ளதாகவும், அது 2023 ஆம் ஆண்டில் சரி செய்யப்படும் என்றும். | பணிக்கொடை ஒதுக்கீடுகளை துல்லியமாக கணக்கிட்டு கணக்கு வைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். |
| (ஈ) | இருப்பு மெய்மையாய்வு சபையினால் சான்றுறுதிப்படுத்தப்படாத ரூபா 775,774 ஆன தபால் முத்திரை, எழுதுகருவிகள் மற்றும் மருத்துவ சான்றிதழ் புத்தகங்கள் ஆகியவற்றின் இருப்பொன்ற மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | முதல் பெறுவனவு முதல் விநியோகிக்கப்படும் கொள்கையீன் அடிப்படையில் இருப்பு தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை மற்றும் 2023 ஆம் ஆண்டின் கணக்குகளில் உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும் என்பது. | மதிப்பாய்வுச் சபையினால் மெய்மையாய்வு செய்யப்பட்ட இறுதி இருப்பு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு | | | |
| (i) 11(1)(உ) பிரிவு | 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவின் 11(1)(உ) | 1963 இன் 15 ஆந் திகதிய 13564 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கமைய | ஆயுர்வேத சட்டத்தின்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, செய்ய |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிரிவிற்கமைய, பதிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களிடையே அவர்களால் தெரிவு செய்யப்பட்ட மூன்று பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் சபையின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட வேண்டும், ஆனால் மீளாய்வாண்டின் இறுதி வரை அந்த மூன்று உறுப்பினர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தேர்தலொன்றை நடாத்துவதற்கு ஏற்படும் அதிக செலவினம் மற்றும் நடைமுறை காலத்திற்க உகந்ததாக காணப்படாமை ஆகியவற்றின் அடிப்படையிவ் 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச்சட்டத்தின் உரிய பகுதிகளை மாற்றியமைப்பததற்கு 2022 யூன் 07 ஆந் திகதி மருத்துவ சபையினால் தீர்மானிக்கப்பட்டது. | முடியாத நடைமுறைச் சிக்கல்களை நீக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இது பல வருடங்களாக சுட்டிக்காட்டப்பட்டு வரும் குறைபாடு என்பதால் இதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். |
| (ii) | 18(இ) மற்றும் (ஈ) பிரிவு | 2022 டிசம்பர் 31 இல் சபையில் பதிவு செய்யப்பட்ட மொத்த தாதியர்களின் எண்ணிக்கை 39 ஆகவும், பிசியோதெரபிஸ்டுகளின் எண்ணிக்கை 260 ஆகவும் இருந்தது மற்றும் பதிவு செயல்முறை சரியான நேரத்தில் பின்பற்றப்படாததால் அந்த எண்ணிக்கைகள் புதுப்பிக்கப்படவில்லை. ஆயுர்வேத மருத்துவத் துறையில் தனித்துவமான செவிலியர்களை ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சி அளிக்கும் உத்தியைப் பின்பற்றுவதற்குப் பதிலாக, சுகாதார அமைச்சின் கீழ் உள்ள தாதியர் பயிற்சிப் பள்ளிகள் ஆயுர்வேத மருத்துவத் துறையில் மேற்கத்திய மருத்துவ முறைகளின் கீழ் பயிற்சி பெற்ற 39 | மேற்கத்திய தாதியர் பயிற்சி பெற்ற தாதியர்களும் ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு பரிந்துரைக்கப்படுவதாகவும், இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவு செய்யப்படவில்லை எனவும், வரும் மேற்கத்திய தாதியர்களுக்கு மூன்று மாத முழுநேர பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதும் பிசியோதெரபிஸ்டுகளின் தகவல்களை நாளதுவரையாக்குவதற்கும் பதிவு செய்யாத பிசியோதெரபிஸ்டுகள் தொடர்பில் தகவல் சேகரிப்பதற்கும் மாகாண ஆணையாளர்களுக்கு | ஆயுர்வேத சட்டத்தின்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, செய்ய முடியாத நடைமுறைச் சிக்கல்களை நீக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இது பல வருடங்களாக சுட்டிக்காட்டப்பட்டு வரும் குறைபாடு என்பதால் இதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செவிலியர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள காரணத்தால் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற முடியவில்லை என்பது தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது. | ம் மத்திய ஆயுர்வேத வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பது. | |
| (iii) | 19(1)(அ) ஆம் பிரிவு | சபையினால் அந்த சபையின் செயலாளராகவும் பதவியணியின் முதன்மை உத்தியோகத்தராகவும் செயற்பட வேண்டிய செயல்படும் பதிவாளர் நியமிக்கப்பட வேண்டும் என்றாலும், அந்த பதவிக்கு நிரந்தர அடிப்படையில் பதிவாளர் ஒருவரை பணி நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்காமல் அந்த பதவிக்கான ஒப்பந்த அடிப்படையில் மற்றும் பதிற்கடமை அடிப்படையில் தொடர்ந்து ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த காரணத்தால் சபையின் நிர்வாக நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கு தடையானதொரு நிலை உருவாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பதிவாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றை தயாரிப்பதற்காக உரிய விதிகள் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுட ன, இறுதி அறிக்கை கிடைத்த பின்னர் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் என்பது மற்றும் அதற்கமைய ஆயுர்வேத மருத்துவ சபையின் பதிவாளரை ஆட்சேர்க்கும் நடைமுறை தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்க அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை. | இந்த செயல்முறை பல ஆண்டுகளாக நடந்து வருகிறது, ஆனால் இதுவரை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் இல்லை. ஆயுர்வேத சட்டத்தின்படி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 756(5) | குறித்த நிதியாண்டின் திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் பொருள் மெய்மையாய்வுச் சபையை நியமித்தல் மற்றும் எதிர்வரும் நிதியாண்டின் சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் மதிப்பாய்வு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு மார்ச் 31 | மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வு 2023 மார்ச் 22 ஆந் திகதிக்கு முன்னர் இடம்பெற்றதுடன், குறித்த அறிக்கையை பெற்று நிதிப்பிரமாணம் 756(5) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆந் திகதிக்கு முன்னர் பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது பொருள் மெய்மையாய்வு இடம்பெற்றிருக்கவில்லை. | | |
| (இ) | உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் (GIR/2019/03-01 (Ins Q (iv) ஆம் இலக்க மற்றும் 2019 யூலை 09 ஆந் திகதிய சுற்றறிக்கையீன் 2 ஆம் பந்தி | பெறுமதி சேர் வரியை (வற்) செலுத்துவதற்கு முன்னர் வழங்குநரின் வற் இலக்கம் செயற்பாட்டில் உள்ளதா என்பது தொடர்பில் என்பதும், பதிவு செய்த நபர் செயற்பாட்டிலுள்ள வரியாளரா என்பது தொடர்பிலும் சான்றுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறான சான்றுபடுத்தல் இல்லாது 12 சந்தர்ப்பங்களில் ரூபா 45,561 கூட்டுத்தொகையான வற் வரி 08 வழங்குநர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டு முதல், தொடர்புடைய வழங்குநர்களின் வற் வரி இலக்கம் செயலில் உள்ளதா என்பது உறுதி செய்யப்படும். | உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் சுற்றறிக்கையின் விதிமுறைகளை பின்பற்ற வேண்டும். |
| (ஈ) | 2014 ஒக்தோபர் 15 ஆந் திகதிய 1884/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஆயுர்வேத வைத்திய சபையின் விதிகள் | ஒவ்வொரு ஆயுர்வேத வைத்தியரும் 05 வருடங்களுக்கு ஒருமுறை தமது பதிவைப் புதுப்பிக்க வேண்டும், ஆனால் அதற்கான முறையான நடைமுறையை சபை கண்டறிந்து நடைமுறைப்படுத்தாத காரணத்தினால் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரை 05 வருடங்களை கடந்த 18,516 வைத்தியர்கள் பதிவைப் | ஆயுர்வேத வைத்திய சபையின் அனைத்து பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களுக்கும் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பித்தல் குறித்து அச்சு ஊடகங்கள் மற்றும் மாகாண ஆயுர்வேத ஆணையாளர்கள் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது. பதிவு புதுப்பிக்கப்படாத வைத்தியர்களின் பெயர் பட்டியல் | உரிமம் பெற்ற ஆயுர்வேத வைத்திய சபையின் விதிகளின்படி செயல்பட வேண்டும். பதிவை புதுப்பிப்பதை ஊக்குவிக்கவும், உரிய வருமானத்தை வசூலிக்கவும் உரிய நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டு பின்பற்றப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | புதுப்பிக்கவில்லை. மேலும், கடந்த வருடம் மற்றும் மீளாய்வில் பதிவைப் புதுப்பிக்க வேண்டிய 430 வைத்தியர்களுக்கான புதுப்பித்தல் கட்டணத் தொகை 795,600 ரூபாவாக இருக்கும் என சபை கணக்கிட்டிருந்த போதிலும், அந்த வருமானத்தைப் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் பின்பற்றப்படவில்லை. | மாவட்ட மட்டத்தில் தயாரிக்கப்பட்டு, அவர்களின் பதிவை புதுப்பித்துக்கொள்ளும‌ாறு மாகாண ஆயுர்வேத ஆணையாளர்களால் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்காக நடமாடும் அலுவலகங்கள் நடத்தப்படும் என்பது. | |
| (உ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையில் வெளியிடப்பட்ட “பொது முயற்சிகளுக்கான நிர்வாகம் தொடர்பான வழிகாட்டி” இலக்கம் 4.2 இன் பிரகாரம் சபையினால் மீளாய்வாண்டின் 04 காலாண்டுகளுக்காக 04 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், ஒரு காலாண்டின் கூட்டமொன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு பெறுபேறு ரூபா 3,295,163 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் மிகை ரூபாா 104,858 ஆனமையால் நிதிப் பெறபேறுகளில் ரூபா 3,190,305 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் அரச மானியங்கள் நீங்கலாக செயற்பாட்டு வருமானம் கடந்த வருடத்திற்கு ஒப்பாக ரூபா 7,187,927 இனால் அதிகரித்தமை அந்த அதிகரிப்பிற்கு பிரதானமான காரணமாக அமைந்திருந்தது.

**2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு**

(அ) சபையின் சம்பளம் மற்றும் படிகளுக்கான அரசின் மானியங்கள் நீங்கலாக, கடந்த வருடத்தின் ரூபா 5,478,047 தொகையான சபையின் வருமானம் மீளாய்வாண்டின் போது ரூபா 12,704,691 வரையிலும் ரூபா 7,226,644 இனால் அல்லது 132 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(ஆ) கடந்த ஆண்டிற்கான ரூபா 12,728,649 தொகையான சபையின் மொத்த செலவினம், மீளாய்வாண்டின் போது ரூபா 16,609,528 வரையிலும் ரூபா 3,880,879 இனால் அல்லது 30 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. கடந்த வருடத்திற்கு ஒப்பாக சபையின் செயற்பாட்டு செலவினம் 46 சதவீதத்தினால் அதிகரித்தமை அதற்கு காரமணாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவுசெய்யப்பட்ட மருத்துவர்களின் தொழில்சார் பிணக்குகள் மற்றும் பதிவு செய்யப்படாத ஆயுர்வேத மருத்துவர்களாகக் காட்டிக் கொள்ளும் நபர்கள் குறித்து கடந்த 5 ஆண்டுகளில கிடைத்திருந்த 247 புகார்களில் 41 முறைப்பாடுகளின புலனாய்வுப் பணிகள் 2023 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆயுர்வேத வைத்திய சபைக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் பின்தொடர்தல் மேற்கொள்ளல் மற்றும் கால அடிப்படையில் அதன் செயன்முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்யக்கூடிய வகையில் முறைப்பாடுகளை பதிவு செய்யும் பதிவேடொன்ற 2022 ஆம் ஆண்டு முதல் பேணிச் செல்லப்படும் என்பது. | பொலிசில் மேற்கொள்ளப்பட்டிருந்த முறைப்பாடுகளும் உள்ளடங்களாக அனைத்து முறைப்பாடுகளையும் விசாரணை செய்து உரிய மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன், முறைப்பாடுகள் தொடர்பில் பின்தொடர்தல் மேற்கொள்ளல் மற்றும் கால அடிப்படையில் அதன் செயன்முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்தல் இடம்பெறக்கூடிய வகையில் முழுமையான தகவல் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை 26,650 ஆகவும், இறந்தவர்களின் எண்ணிக்கை 3,827 என்றும் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், இறந்த பாரம்பரிய மருத்துவர்கள் பற்றிய துல்லியமான தகவல்களைப் பெற எந்த முறையும் செயல்படுத்தப்படவில்லை. மேலும், இறந்த மருத்துவர்களின் பதிவுச் சான்றிதழ்களை இரத்துச் செய்து அது தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவிக்கும் | இறப்பு சான்றிதழ் அல்லது பிராந்திய செயலாளரால் சான்றளிக்கப்பட்ட ஆவணம் அல்லது பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்களால் செய்யப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில், பெயர் பதிவேட்டில் இருந்து நீக்கப்பட்டு, பெயர் ரத்து செய்யப்படல் மற்றும் இரத்துச் செய்யப்பட்ட பெயர்கள் மாகாண ஆயுர்வேத ஆணையர்களுக்கு தெரிவிக்கவும், அந்த பெயர்ப்பட்டியலை ஆயுர்வேத வைத்திய சபையின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் | சரியான மற்றும் சரியான முடிவுகளை எடுப்பதற்கு புதுப்பித்த மற்றும் துல்லியமான புள்ளிவிவரங்கள் பராமரிக்கப்பட வேண்டும் மற்றும் இறந்த மருத்துவர்களின் பதிவுச் சான்றிதழ்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பொறிமுறை இல்லாததால், அவர்களின் பதிவுச் சான்றிதழை தவறாகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | வெளியிடவும் நடடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | |
| (ஆ) பரம்பரை ஆயுர்வேத மருத்துவர்களாக பதிவு செய்ய எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர்களுக்கு பயிற்சிக் காலத்தினுள் மதிப்பீடுகளுக்காக தயாரிக்கப்பட்ட அளவீடுகளுக்கமைய மாணவர்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பதிவு செய்ய எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர்களுக்கு முன் பதிவு தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டு, அதன்படி விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருவதாகவும், 2025 முதல் இம்முறையை நடைமுறைப்படுத்த வைத்திய சபை ஒப்புதல் அளித்துள்ளது. | மாணவர்களை பதிவு செய்யும் பணிகள் துரிதமாக ஆரம்பிக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டுக்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கியிருந்த 08 பணிகளில் 02 பணிகள், அதாவது 25 சதவீதம் மீளாய்வாண்டினுள் ஆரம்பிக்க முடியாதிருந்தது. மேலும், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த செயற்பாடொன்றான ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் ஒரு தடவை பதிவினை புதுப்பிக்க வேண்டிய மருத்துவர்களுக்குரிய விண்ணப்பங்களை அனுப்பிவைக்கும் நடவடிக்கைகளின் | இக்காலத்தில் எழுதுபொருட்கள் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு, சுழற்சி முறையில் பணிபுரியும் ஊழியர்களின் அழைப்பு போன்ற காரணங்களால் மருத்துவ சபைக்கும் உரிய சேவைப் பயனாளிகளுக்கும் இடையிலான நெருங்கிய உறவு முறிந்துள்ளது. மக்களைக் ஒன்றுசேர்ப்பதில் உள்ள சிரமம் காரணமாக சில நடவடிக்கைகள் 25 சதவீதத்துக்கும் குறைவாகவே செயல்படுத்தப்பட்டன. | செயல்திட்டத்தின்படி செயல்படுவதன் மூலம் எதிர்பார்த்த செயலாற்றலை அடைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செயன்முன்னேற்றம் 30 சதவீதம் எனும் குறைவான மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) ஆயுர்வேத மருத்துவர்கள், பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவர்கள், ஆயுர்வேத செவிலியர்கள் மற்றும் பிசியோதெரபிஸ்ட்கள் ஆகியோரை பதிவு செய்தல், அவர்களுக்கான தேர்வுகளை நடத்துதல், தேர்வு முடிவுகளை வழங்குதல் போன்றவற்றின் செயல்பாடுகளை மதிப்பிடுவதற்கு செயல்திறன் குறிகாட்டிகள் நிறுவப்பட்டு செயல்திறன் மதிப்பாய்வு செய்யப்படவில்லை. | செயல்திறன் குறிகாட்டிகளை நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கைகளை திட்டமிடுவது குறித்து ஆயுர்வேத மருத்துவ கவுன்சிலின் கவனம் செலுத்தப்பட்டது, அதன்படி, 2022 ஆம் ஆண்டு முதல் பாரம்பரிய மருத்துவர்களாக பதிவு செய்ய எதிர்பார்க்கப்படும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது மார்ச் 01 முதல் ஜூன் 30 வரையிலும், நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படல் ஜூலை 01 முதல் டிசம்பர் 31 வரையிலும் நடாத்துவதற்கும், எழுத்துமூல தேர்வுகள் பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் நடத்த திட்டமிடப்பட்டு, அது செயல்நடவடிக்கைத் திட்டத்திலும் சேர்க்கப்பட்டுள்ளது என்பது. | திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளின் செயலாற்றலினை மதிப்பிடுவதற்கு செயல்திறன் குறிகாட்டிகள் நிறுவப்பட்டு மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். |

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் 08 செலின விடயங்களுக்கு மீண்டெழும் செலவினங்களுக்கான மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டினை விஞ்சி உள்ளபடியான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அது 112 சதவீதம் முதல் 140 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. அதற்கமைய பாதீட்டினை ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டு கருவியொன்றாக ஈடுபடுத்தியிராமை அவதானிக்கப்பட்டது. | நாட்டில் நிலவும் பொருளாதார நிலை காரணமாக பொருட்களின் விலைகள் அதிகரித்தமையினால் அன்றைய தினம் மதிப்பிடப்பட்ட தொகையை விட அதிகமாக செலவு செய்து சபை தனது பணிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. 2023 ஆம் ஆண்டில், அந்தந்த மதிப்பீடுகளின் | பாதீடானது ஒரு பயனுள்ள நிதிக் கட்டுப்பாட்டு கருவியாகப் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வரம்புகளுக்குள் பணிபுரிய சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. | |

**4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்திக்கான ‘‘2030 நிகழ்ச்சி நிரல்’’ பிரகாரம், ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் செயற்பட வேண்டியதுடன், மீளாய்வாண்டுக்கு உரியதாக கசையினால் தமது விடயப்பரப்பிற்கு உட்பட்ட பணிகள் தொடர்பில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் அறிந்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக்கான ‘‘2030 நிகழ்ச்சி நிரல்’’ தொடர்பாக ஆயுர்வவேத வைத்திய சபையின் விடயப்பரப்பிற்கு உட்பட்ட பணிகள் தொடர்பில் ஆயுர்வேத வைத்திய சபையின் அங்கத்தவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளமை மற்றும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுப்பதாக. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைவதுடன் தொடர்புடைய இலக்குகள், குறிகாட்டிகள் அடையாளம் காண்பதற்கும் செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |